ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

अयं जनः कर्मवशाद्विलक्षणः प्रसूति विद्याऽभिनिवेशकर्मभिः ।
किमत्र चित्रं यदि युक्तमाचरेत् प्रसूतिविद्याऽभिनिवेशकर्मभिः ॥

"கண்ணுக்குக் காணும் ஜனங்களெல்லாம் கர்மவசத்தாலமைந்த பிறப்பு- கல்வி- ஊக்கம்- தொழில் இவைகளால் விலக்ஷணங்களாயிருக்கின்றன. ஒருவரைப்போலொருவர் இருப்பதில்லை. ஆகவே அவரவர்களின் பிறப்பு-கல்வி-ஊக்கம்-தொழில் முதலிய குணங்களுக்குத் தக்கபடி நடந்துகொண்டுவருவார்களேயானால் அதில்என்ன ஆச்சரியம்." உலகத்தில் எந்த ஜனங்களைப்பார்த்தாலும் ஒருவரைப்போல் ஒருவர் எவ்விதத்திலும் இருப்பதாகக் காணப்படவில்லை. பிறப்பினாலேயே பலருக்கு வேற்றுமை காணப்படுகிறது. அங்காவயவங்களில் பிரதி மனுஷ்யனுக்கும் வித்தியாஸமிருக்கிறது. பணத்திலும் ஸாம்யமில்லை. ஒருவன் பிறப்பிலேயே சக்கிரவர்த்தியாயிருக்கிறான், ஒருவன் அவனிடம் சேவைசெய்து வயிர்வளர்க்கத் தொங்கிக்கொண்டிருக்கிறான். கல்வியிலும் ஒருவனோடு ஒருவன் ஒற்றுமையாயில்லை. ஒரே வகுப்பில் படித்துத் தேறினவர்களிலும் ஒருவன் பிரஸிடென்ஸிலேயே முதல்வனாகத் தேறுகிறான். மற்றவன் அப்படியிருக்கவில்லை. புத்திஸூக்ஷ்மம், பேச்சுத்திறமை, போதனாசக்தி முதலிய விசேஷங்கள் விசித்திரமாகவே காணப்படுகின்றன. கார்ய விசேஷங்களில் ஒருவனுக்கிருக்கும் ஊக்கம்போல் மற்றவனுக்கில்லை. இவைகளுக்குத்தக்கபடி தொழில்களும் பல வேறுபட்டதாகப் பிரிந்து கிடக்கின்றன. இம்மாதிரியுள்ள பல காரணங்களால் பாஸ்பரம் விலக்ஷணர்களாயுள்ள ஜனங்கள் ஒரே வழியில் செல்லாமல் பல பல வழிகளில் போய்க்கொண்டிருப்பது ஸஹஜந்தான், யுக்தமுந்தான். இதில் ஆச்சரியப்படவேண்டியது என்னவிருக்கிறது? அப்படியிருக்கையில் தற்காலத்தியவர்கள் பரஸ்பரம் ஒற்றுமையில்லாமலும், ஒற்றுமைக்குக் காரணத்தில் கெவனமில்லாமலும், தன் தலையாட்டமாய்ப் போய்க்கொண்டு "இதோர் அற்புதம்-இதோர் விந்தை-இதோர் ஆச்சரியம்"? என்று பத்திரிகைகளில் ஒருவரைப்பற்றி ஒருவர் வியந்து எழுதிக்கொண்டவண்ணமாயிருக்கிறார்கள். ஒற்றுமைப்படாதவரையில் ஒருமைப்பட்ட பேச்சு எங்கே கிளம்பும்? அதில்லாவிடில் ஒவ்வொருவனும் ஒவ்வொருவிதமாகப்பேசும்போது ஆச்சரியமாகத்தானிருக்கும். ஒருமைப்பட்டபேச்சு வரவேண்டுமானால் ஒருவன் சொல்லின்கீழ் நடக்கவேண்டும். அப்படி ஒருவன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்கள் நடத்தையோ, பேச்சோ, அந்த கோஷ்டியாருக்கு வியப்பை உண்டுபண்ணாது. தேவகுருவின் உபதேசப்படி நடக்கும் தேவர்களும், அசுரகுருவின்சொற்படி நடக்கும் அஸுரர்களும், தம் தம் கோஷ்டியாரைக்கண்டு "இதென்ன ஆச்சரியம்" என்று வியப்படைந்தார்களா? தற்போதும் பல கூட்டத்தார் தம் தம் கூட்டத்தின் கொள்கையை வித்தியாஸமாய் நினைக்கிறார்களா? ஆகவே வைலக்ஷண்யமுள்ளவரை ஒருவர் கார்யம் ஒருவருக்குப் பிடிக்காது. அப்படிக்கில்லாமல் யாவரும் ஆதிகுருவின் ஆணைக்குக் கட்டுப்பட்டு ஒருமைப்பட்டு வாழ்வாராக. சுபம்.

பா—ர்.

ஆர்ய தர்மம்.

ப்ரஜாபதி-௵ தை-௴ ௨௯-௨

குணமுடையதைவிடக்கூடாது.

புதிதானாலும், பழையதானாலும், குணமுடையதாயின் அதைக் கைவிடவேகூடாது. அது எப்பொழுதும் ஹிதமாகவே இருக்கும். புத்திமான் அதைத் திரைந்துபார்த்து எடுக்கவேணுமேயன்றி புதியது பழையது என்று கவ்னிக்கக்கூடாது. அவ்விரண்டிலும் குணமுண்டு. தோஷமுண்டு. பாசீனமென்றதற்காகவே தோஷமுடையதாய்விடமாட்டாது. நவீனமென்பதற்காகவே தோஷமற்றதாயும் ஆய்விடமாட்டாது. பரீக்ஷித்து நிதானிக்கவேண்டும். அங்ஙனமே—

नूत्नमित्येव नोसाधु न दुष्येत् प्रत्नमित्यपि ।
परीक्ष्य पण्डितै र्ग्राह्यं हितं गुणवदेव च ॥

“புதியது என்பதற்காகவே எல்லாம் நல்லதாய்விடாது. பழையது என்பதற்காகவே எல்லாம் தோஷமுடையதாய்விடாது. இரண்டிலு மிரண்டுமிருக்கலாம். அவைகளைப் பண்டிதனாயுள்ளவன் பரீக்ஷித்துப் பார்த்து ஹிதமாயும் குணமுடையதாயுமுள்ளதைத் தான் கிரஹிக்கவேண்டும்” என்று பெரியோர் போதிக்கின்றார். மஹாகவி ஸ்ரீகாளிதாஸரும் இதை ஆமோதித்திருக்கின்றார். தற்காலத்தில் சிலர் பிராசீனவர்ணாசிரம ஆசாரத்தைப் பழையதென்று பழிக்கின்றனர். புது நாகரீகத்தைப் புதிதெனப் புகழ்கின்றனர். பழையன கழிவதும் புதியன புகுவதும் பிரபஞ்சத்தின் இயல்பு என்றும் பேசிக்கொள்ளுகிறார்கள். அப்படிச் சொல்லிக்கொள்ளு மிவர் பழையதில் எதை விட்டார் என்று பார்ப்போம். இவர் வஸிக்குமிடம் பழைய பாரதநாடே. பழையதென்று அதைவிட்டாரா? வருஷம்-அயனம்-ருது-மாதம்-பக்ஷம்-கிழமை-பகல்-இரவு என்பதாதியாக வியவஹரிக்கப்படும் காலப் பிரிவினையெல்லாம் பழகினவைகளே. அவைகளை விட்டனரா? வெள்ளி-வெண்கலம் இரும்பு-ஈயம்-பொன்-பித்தளை முதலிய லோஹங்கள் புராதனங்

களே. அவற்றுள் எதைத் தள்ளினர்? அரிசி-பருப்பு முதலிய உணவுப் பொருள்களும் அநாதியாயுள்ளவைகளே. அவைகளில் எதை விலக்கினர்? பிள்ளைகுட்டி பெற்றுப் பிரபஞ்சத்தை வளர்ப்பதும் பழையகதைதான். அதையொழித்தனரா? பிராசீனமானவைகளில் ஒன்றாவது விடப்பட்டதாகத் தெரியவில்லை. வர்ணாசிரம தர்மம் ஒன்றைமாத்திரம் விட்டுவிடத் துணிந்துவிட்டார்கள். பழையவைகளில் இதுமாத்திரம் என்ன பாபம்செய்ததோ தெரியவில்லை. மற்றவைகளெல்லாம் ஹிதகரங்களாகையால் விடப்படவில்லையென்றால் வர்ணாசிரமதர்மம் ஹிதகரமில்லையென்று எவர் சொன்னார்? நாங்கள் சொல்லுகிறோமே என்று திருத்தக்காரர் சொல்லுவார்களானால் இவர் வாக்கு வேதவாக்காஎன்ன? வேதம் பிரமாணமில்லையென்றால்! இவர்களது வார்த்தை எப்படி பிரமாணமாயிற்றோ? ஸிருஷ்டிகாலம்தொடங்கி ஆஸேதுஹிமாசலமும் ஓரேஸ்வரத்துடன் ஓரே வரிசையில் குருமுகமாகக்கிரஹிக்கப்பட்டு பிரமாணமென்றே வழங்கிவந்த வேதம் தப்பாம். நொடிக்கு நூறுவிதமாக மாற்றிப்பேசும் பேச்சுசரியாம். இதெல்லாம் வித்வேஷத்தாலேயன்றி வேறில்லை. ஹிதகரமென்று பழைய சாப்பாட்டையே சாப்பிட்டுவருவதுபோலும், மற்றவைகளை செய்து வருவதுபோலும், வர்ணாசிரமதர்மமும் குணமுடையதென்றும், ஹிதகரமென்றும் வேதப் பிரமாணத்தால் நம்பி அனுஷ்டிக்கப்பட்டு வரவேண்டியதுதான். ஓரே பிரமாணத்திற்கும் ஓரே குருகுலத்திற்கும் கீழ்ப்படிந்து வைலக்ஷண்யத்தைப் பாராட்டாமலும் ஒருவரையொருவர் இகழ்ந்துபேசாமலும் ஒற்றுமைப்பட்டு குணமுடையதைக் கைவிடாமல் ஹிதத்தையே நாடி நடந்தால் இஹத்திலும் பரத்திலும் சுகத்தையடையலாம். வைதிக வித்வேஷத்தால் விதண்டைபேசி வீண்காலம் கழித்துவந்தவிடத்தில் வம்பு பண்ணித் திரிந்தால் சொந்தஇடம் போகமுடியாது. பவப்பிணியால் பீடையடைந்து கஷ்டப்படவேண்டியதாகும். அப்படிப் போகாமல் எல்லோரும் நல்லதைநாடி நன்மைபெறுவார்களாக.

சுபம். பத்திராதிபர்

"குணமதுகைவிடேல்"

உபதேசஸாரம்.

இந்திரியாத்துமவாதியின் கொள்கை.

சார்வாகமதத்தின் ஒரு பிரிவினரான சரீராத்தும வாதிகள் புத்திராத்தும வாதிகளைவிடச் சிறந்த புத்தியையடைந்து அவர்களுடைய கக்ஷியைக்கண்டித்துத் தங்களது சரீராத்தும வாதத்தை சில சுருதி-யுக்தி அனுபவங்களால் ஸ்தாபித்தார்கள் என்று முன் கூறப்பட்டது. அதனால் புத்திராத்துமவாதிகள் காட்டிய சுருதி-யுக்தி- அநுபவங்கள்-ஆபாஸங்களெனக் காண்பிவிக்கப்பட்டதாயிற்று. அதுபோலவே சரீராத்துமவாதிகள் காட்டிய சுருதி யுக்தி முதலியவைகளும் ஆபாஸங்களேயன்றி வேறல்லவென்று அதற்கும்மேலான மற்றோர் சார்வாக மதஸ்தர் இந்திரியாத்தும வாதத்தைப் பேசுகிறார். முதலில் சரீராத்துமவாதத்தைக் கண்டிக்கிறார்—ஸ்தூலசரீரம் ஆத்துமாவெனப் பொருந்தாது. என்னுடைய வீடு-என்னுடைய காடு-என்னுடைய மாடு என்பதாகத் தன் சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டதும், அப்படியே தோன்றுவதுமான வீடு காடு முதலியன தானாக ஆவதில்லையா? அது போலவே என்னுடைய சரீரமென்று வேறுபட்டுத் தோன்றும் ஸ்தூல சரீரமும் ஆத்துமாவாகாது. ஆனால் புத்திராதி சரீரத்திற்கும் பித்ராதி சரீரத்திற்கும் பேதம் எப்பொழுதும் ஸ்புடமாகவே தோன்றிக்கொண்டிக்கிறது. எங்கு பேதம் ஸ்புடமாகத்தோன்றிக் கொண்டிருக்கும்பொழுதே அபேதம் கூறப்படுகின்றதோ? அங்கு அது முக்கியமாக ஆகாது. "இந்தச் சிறுவன் சிங்கம்,, என்பதாதிப் பிரயோகங்களில் சிறுவனுக்கும் சிங்கத்திற்கும் பேதம் ஸ்பஷ்டமாகக் காண்கிறபடியால் சிறுவனே சிங்கமாய்விடமாட்டான். ஆனால் சிங்கம்போல் சௌர்யமுள்ளவன் என்ற கருத்தால் "சிறுவன் சிங்கம்" என்று கூறப்படுகின்றது. அது கௌணப் பிரயோகமாம். அங்ஙனமே பஞ்ச தசியில்—

देवदत्तस्तु सिंहोऽय मित्यैक्यं गौणमेतयोः ।
भेदस्य भासमानत्वात् पुत्रादेरात्मता तथा ॥

"தேவதத்தன் ஸிம்ஹம்" என்றவிடத்தில் தேவதத்தனுக்கும் ஸிம்ஹத்திற்கும் பேதம் ஸ்புடமாகத் தோன்றுவதால் அவர்க

ளுக்கு முக்கிய ஐக்கியமில்லை. கௌணமாமது. அதுபோற்றான் புத்திரன் ஆத்துமாவென்பதும்" என்று கூறப்பட்டது "புத்திரனே ஆத்துமா ஆவான்" என்பதாதியாகக் கூறும் சுருதியும் புத்திரன் கௌண ஆத்துமாவென்ற கருத்துடையதாம். நம்முடைய சரீரம் பிரியமாயிருப்பதுபோல் புத்திராதிசரீரமும் அனுகூலமாயிருக்கும்ஸமயத்தில் பிரியமாகும் என்று ஸ்தூலதிருஷ்டிகள் நினைத்திருப்பதை அனுவாதம் செய்கின்றது. அதனுற்றான் வீடு தீப்பட்டெரியும்பொழுது, தான் பிழைத்தால் போதுமென்று புத்திரனை விட்டுப்போட்டுக்கிளம்பிவிடுகிறான். அங்ஙனமே—

प्रदीप्तगृहात् स्वपुत्रं परित्यज्यापि स्वस्य निर्गमनदर्शनात् ।

"தீப்பிடித்த வீட்டினின்று புத்திரனை விட்டுப்போட்டு தான் வெளிப்படுவதால்" என்றுவேதாந்த ஸாஸ்திரத்தில்புத்திரன் ஆத்துமா இல்லை என்பதற்கு யுக்தி கூறப்படுகின்றது. அதுபோலவே ஸ்தூல சரீரம் ஆத்துமா என்று தோன்றுவதும் முக்கியமில்லை. அன்றியும் ஸ்தூல சரீரம் ஆத்துமாவாக இருந்தால் அது பால்ய-கௌமார-யௌவனுதி அவஸ்தைகளில் மாறி மாறி வெவ்வேறு பட்டதாக ஆய்விடுகிறபடியால் முன் அனுபவத்ததை பிந்தி நினைக்கமாட்டாது. தேவதத்தன் அனுபவித்ததை யக்ஞதத்தன் ஸ்மரிப்பானு? பால்யாவஸ்தையில் நடந்ததைக் கௌமாரத்திலும் அதில் நடந்ததை யௌவனத்திலும் ஸ்மரிப்பதால் எல்லா அவஸ்தைகளிலும் மாருமல் தொடர்ந்து நிற்பதாயுள்ளதே ஆத்துமாவாக ஆகவேண்டும். ஸ்தூல சரீரமப்படியில்லாமையால் ஆத்துமாவாகாது. நான் இளைத்தவன் பெருத்தவன் எனத் தோன்றுவதும் பிரமத்தாலாம், அதாவது தேஹத்தை நானென்று பிரமித்துக்கொண்டு அபிமானத்தால் சொல்லுவதாம். புத்திரன் இளைத்தால் தானே இளைத்துவிட்டதாக அபிமானத்தால் நினைப்பதுபோலவாம். "ஸ்தூலமான அன்னமயமே ஆத்துமா" வெனக் காட்டின தைத்திரீய சுருதியும் அதோடு நின்றுவிடவில்லை அதற்குள்ளும் வேறு ஆத்துமா இருப்பதாகக் கருதுகின்றது. ஆகையால் ஸ்தூலசரீரம் ஆத்துமா அல்ல. ஆனல் இந்திரியங்களே ஆத்துமாவாக ஆகலாம்போலிருக்கிறது. சாந்தோக்கியம்-பிருகதாரண்ணியகம் முதலிய சுருதிகளில் "இந்திரியங்களுள் ஒவ்வொன்றும் தன் தன் மேன்மையைப்பற்றி நான்தான் சிரேஷ்டன்

நான்தான் பெரியவன் என்று விவாதம் செய்துகொண்டன தங்களுக்குள் விவாதம் முடிவடையவில்லை. பிதாவாகிய பிரஜாபதியிடம் சென்றன. எங்களுக்குள் எவன் சிரேஷ்டன் எனக் கேட்டன. எவன் வெளிப்பட்டால் சரீரம் சவமாய்விடுமோ? அவன் உங்களுக்குள் சிரேஷ்டன் என்றார் பிதா. அதைக்கேட்டு வந்து இந்திரியங்கள் ஒவ்வொன்றாய் ஒவ்வொரு வருஷம் வெளிப்பட்டுப்பார்த்தன" என்பதாதியாக வர்ணிக்கப்படுவதைப் பார்த்தால் இந்திரியங்களே ஆத்துமாவெனத் தோன்றுகிறது' ஆத்துமாவென்பது அறிவுடையதென்பது எல்லோருமொப்பியதே. ஆகவே கீழ்க்காட்டிய வியவஹாரங்கள் அறிவிடையோன் செய்யவேண்டியவை. அவைகளை இந்திரியங்கள் செய்தன என்றால் அவைகளே அறிவுடையனவென்றும், ஆத்துமாவென்றும், ஆகவில்லையா? அன்றியும் சரீரம் அசைவது சேதனனாகிய ஆத்துமாவின்கார்யம். சரீரம் சேதனமல்ல ஜடமாயுள்ளது. சரீரம் ஜடமாயில்லாமல் சேதனமாயிருக்குமாயின் ஸுஷுப்தி அவஸ்தையிலும் சரீரமிருப்பதால் ஜாகராவஸ்தையில் போலவே கார்யங்கள் நடக்குமல்லவா? நடக்கக்காணவில்லை. அதனால் அந்தக் கார்யங்கள் இந்திரியங்கள் இருக்கும்பொழுது நடப்பதாலும் அவைகள் ஒடுங்கும்பொழுது நடக்காமலிருப்பதாலும் இந்திரியங்களே ஆத்மாவென்றும், அறிவுக்கு ஆசிரயமென்றும், அசைவுக்குக் காரணமென்றுமாகிறது. "இந்திரியங்களை அறிவுக்குக் காரண (ஸாதன) மென்றும், சொல்லிவிடலாமே, காரணமிருந்தால் கார்யமுண்டு இல்லாவிட்டால் இல்லை என்றநியாயயப்படி ஞானகாரணங்களாகிய இந்திரியங்களிருந்தால் அறிவு அசைவு முதலிய கார்யங்கள் உண்டாகின்றன. இல்லாவிட்டால் உண்டாவதில்லையென்று சொல்லிவிடக் கூடாதோ வென்று இங்கு ஓர் சங்கை வரலாம். அது சரிப்படாது. இந்திரியங்களை ஞான காரணங்களென்று ஒப்புக்கொண்டுவிட்டால் ஞானத்திற்கு ஆசிரயம் எதுவென்று கூறுவது? சரீரமெனலாமே என்றால் இது இன்றும் நிலைக்கவில்லையே. விவாதத்திலல்லவா நிற்கின்றது. சரீரம் அறிவுக்கு ஆசிரயமாயின் ஸுஷுப்தியில் என் அறியவில்லை என்ற கேள்வை நிற்பதால் சரீரம் ஞானாசிரயமென்று ஸித்திக்கவில்லை. முதலில் அறிவுக்கு ஆசிரயத்தைப் பற்றிய ஆகாங்க்ஷையுண்டாகிறது. அதை நிவர்த்திக்க சரீரத்தை வைத்

துக்கொண்டு முடியவில்லை. ஆகவே இந்திரியங்களே ஞானுசிரய மான ஆத்துமா. பிறகுதான் கரணங்களைப்பற்றி ஆகாங்க்ஷை வரும். அதற்கு எப்படியாவது பார்த்துக்கொள்ளுவோம். அனு பவமும்-நான் குருடன்-செவிடன் என்பதாதியயாக இந்திரியாத் துமவாதத்தையே திடப்படுத்துகிறது. நான் பெருத்தவன் இளைத்தவன் என்ற அனுபவம்போல் நான் பொட்டையன் என்பதாதி அனுபவத்தை பிரமத்தாலென்று சொல்லிவிடக்கூடா தோவெனில் கூடாது. 'நான் இளைத்தவன்' என்பதற்கு பாதக மாக என்னுடைய சரீரம் இளைத்ததென்று பேதம்தோன்றுவதா லாமென்க. ஆதலால் கீழ்க்காட்டிய சுருதியுக்தி அனுபவங்களைக் கொண்டு இந்திரியாத்துமவாதமே தேவலையென்று தோன்றுகிறது என்று மற்றோர் சார்வாகமதஸ்தருடைய கொள்கை. அதனுற்றுன் இந்திரியங்களின் உபாஸனையும் அதன் பலனும் दश मन्वन्तराणीह तिष्ठन्तीन्द्रियचिन्तकाः இந்திரியோபாஸ னம் செய்தவர்கள் பத்துமன்வந்தரம் இருப்பார்கள்., என்று சில விடத்தில் கூறப்படுகின்றது. இதுவும் விவேகிகளுக்கு சரீராத் துமவாதத்தை நிவர்த்திக்க ஸாதனமாகும்.

மத்வாவதாராத்புதலீலாரகஸ்யங்கள்

(64-வது பக்கத்தொடர்ச்சி)

"मुरारेस्तृतीयः पन्थाः" 'முராரிக்குமூன்ருவதுவழி' என்றபடி அத்வைதத்திற்கும் விசிஷ்டாத்வைதத்திற்கும் மாறுதலாய் துவை தம்என்று மத்வர் கண்டுபிடித்த குறுக்குவழியைப்பார்த்தீர்களா? இதுபர்யந்தம்பிராம்ண தைவமென்றுசுருதிகளில்புகழப்பட்டபாம சிவனிடத்திலுள்ள மத்வரின் துவேஷத்தை விளக்கினேம். இனி பிராம்மணேத்தமர்களாயும் வைதிகஸார்வ பௌமர்களாயும் தந்திர ஸம்பந்தம் கொஞ்சங்கூட இல்லாமல் கேவல வைதிகர் களாயும் உள்ள அத்வைதிகளிடத்தில் மத்வருக்கு ஏற்பட்ட அளவில்லாத துவேஷத்திற்கும் அந்த கௌதமாதிசாபமே காரணம். எந்த தர்சனகாரர்களும் வேதாந்திமதம் என்று கூறி இருப்பது அத்வைதமதம் ஒன்றையே. ஆகையால் வேதாந்தி களென்றும் ஔபனிஷதர்களென்றும் வைதிகர்களென்றும் அத்

வைதிகளே வழங்கப்படுகிறார்கள். அவ்வித மஹிமைபெற்ற வைதிகர்களை அவர்களின் மதம் இன்னதென்றே தனக்கு அறியச் சக்தியில்லாமல் அஜ்ஞானத்தினால் புரியாமல் ஆக்ஷேபித்துக் கொண்டு

क्रुद्धः परुषया वाचा नरस्साधूनधिक्षिपेत् ।
क्रुद्धः पापं न कुर्यात् कः क्रुद्धो हन्याद्गुरूनपि ।
वाच्यावाच्यं न जानाति ।

"கோபம்வந்தவன் எந்த பாபத்தைத்தான் செய்யமாட்டான் தனது குருக்களையுங்கூடக் கொன்றுவிடுவான். இன்னது சொல்லுகிறது இன்னது சொல்லக்கூடாது என்பதை அறிய மாட்டான். கடுஞ் சொல்லுகளால் ஸாதுக்களான பெரியோர்களைப் பெரியோர்களென்று பாராமல் அதிக்ஷேபம் செய்வான்" என்பது முதலிய ராமாயணத்திலுள்ள மாத்வர்களுடைய உபாஸ்யதைவமான ஹனுமானுடைய வசனங்களை அனுஸரித்து கண்டபடித் தனது கிரந்தங்களில் மத்வர் தூஷித்திருக்கின்றார். அது வருமாறு:—

आनन्दतीर्थपुंसिंहो मायावादिदितेस्सुतान् ।
विदार्य युक्तिनखरैरप्रतीपो विभासते ॥
पलायध्वं पलायध्वं त्वरया मायिदानवाः ।
सर्वज्ञहरिरायाति तर्कागमदरारिभृत् ॥
द्रवत द्रवताशु मायिनः प्रविशध्वमतंद्रिता गुहाः ।
कमलारमणांबराश्रय स्समुदेत्यखिलज्ञभास्करः ॥
नृहरिस्सकलज्ञनामक स्समुपैति मायिदानवान् ।
प्रपलायनमत्र तत्क्षमं त्वरया वो वसतिर्गुहासुच ॥
मायावादतमोऽव्याप्तमिति तत्वदृशा जगत् ।
भातं सर्वज्ञसूर्येण प्रीतये श्रीपतेस्सदा ॥

"ஆனந்ததீர்த்தரென்னும் ந்ருஸிம்மம் யுக்திகளாகிய நகங்களால் மாயாவாதிகளாகிய அஸுரர்களைப் பிளந்துவிட்டுத் தனக்குப் ப்ரதிபடன் இல்லாமல் விளங்குகின்றது. மாயிகளாகிய அஸுரர்களே! சீக்ரமாக ஓடுங்கள். ஸர்வஜ்ஞனாகிய விஷ்ணுபிரும்மதர்க்கம் காடாரயணாதி சுருதிகள் என்னும் சங்கசக்ரங்களைத் தரித்து வருகிறார். மாயிகளே! விஷ்ணுவாகிய ஆகாசத்தை ஆச்ரயித்துக்

கொண்டு அகிலஜ்ஞராகிய ஸூர்யன் உதித்துவிட்டார் தாமஸ மன்னியில் ஓடுங்கள்! குகைகளில்போய் ஒளியுங்கள்.

ஸகலஜ்ஞனென்றும் ந்ருஸிம்மம் மாயிகளாகிய அஸுரர்களை அடைந்துவிட்டது. ஆகையால் மாயிகளே! நீங்கள் ஓடிப்போவது தான் உசிதம். குகைகளில்போய்ச் சீக்கிரம் ஒளியுங்கள். மாயா வாதமாகிய இருளால் சூழப்பட்ட உலகமானது தத்துவ வாதி யான ஸர்வஜ்ஞ ஸூர்யனால் வெளிச்சமாகச் செய்யப்பட்டது.''

என்பது முதலிய சுலோகங்களாலும் வாக்கியங்களாலும் பெரும்பாலும் தனது எல்லா கிரந்தங்களிலும் அத்வைதிகளை அஸுரர்களென்றும், பௌத்தர்களென்றும், கண்டபடி தூஷி த்தும் தனக்குப் பூர்ணப்ரஜ்ஞன், ஸர்வஜ்ஞன், அகிலஜ்ஞன், ஸகலஜ்ஞன், தத்துவவாதீ, என்று அர்த்தமில்லாத பிருதுகளை தானே வைத்துக்கொண்டும், பெருந்தன்மையும் கண்யமுமில் லாமல் விளையாட்டுப்பிள்ளைகளைப்போல் அடக்குவாரில்லாததால் இது கிடக்கிறதென்று பெரியோர்கள் அலக்ஷ்யமாயிருந்ததால் மத்வர் துள்ளிக்குதிக்கிறார். இவ்விதம் வைதிகர்களிடத்திலும் சிவனிடத்திலும் துவேஷம் மத்வருக்கு வந்தது கௌதமாதி சாபமூலகமே, பெரியோர்களுடைய சாபம் வீண்போகுமா? இந்த மத்வராகிய குரு காட்டினவழியை அனுஸரித்தே அவர் சிஷ்யர்களுள் ஒருவராகிய ராகவேந்திரயதி என்பவர் சந்திரி காப்பிரகாசம் என்னும் கிரந்தாரம்பத்தில்

शर्वादिसर्वगीर्वाण निर्वाणगतिहेतवः ।
पूर्णप्रज्ञपदांभोजरेणवः पान्तु नस्सदा ॥

"சிவன் முதலிய ஸகலதேவர்களுக்கும் நல்லகதியை உண்டுபண் ணின பூர்ணப்பிரஜ்ஞரின் பாததூளிகள் நம்மை ரக்ஷிக்கட்டும்" என்றுதனது குருவாகிய மத்வருடைய பாததூளியால் சிவனுக்கு நல்லகதி ஏற்பட்டதாகப் பிதற்றுகிறார்.

तिष्ठन्मूत्रस्य शिष्यस्य धावन्मूत्रः पुरोहितः ।

"நின்றுகொண்டு மலஜல விஸர்ஜனம் செய்யும் சிஷ்யனுக்கு ஓடிக்கொண்டு மலஜலவிஸர்ஜனம்செய்பவர் புரோஹிதர்" என்கிற நியாயமாகக் குருசிஷ்யபரம்பரை ஒழுங்காகவே அமைந்திருக் கிறது. சென்ற வர்ஷத்தில்கூட விஷ்ணுகோவில்களில் கல்யா

ணம் செய்யலாம் சிவன்கோவில்களில் ஸபிண்டீகாணம் செய்யலாம் என்று ஓர் மத்வசிஷ்யர் எழுதியதற்குத் தகுந்தவிடை இதே ஆர்யதர்ம பத்திரிகைமூலம் எனது நண்பரால் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஆகையால் மத்வர் பிராம்மண தைவமான சிவனையும், பிராம்மணோத்தமர்களாகிய அத்வைதிகளையும் வீணாக த்வேஷித்துக் கோணலானமார்க்கத்தில்போவது தான் கபியின் அவதாரமென்பதையும், முரட்டுத்தனமாய்ப்போவது பீமாவதாரமென்பதையும், தனதுவாக்கில் பரிமளமில்லாதிருப்பது பிராணபானதிவாயுக்களில் இரண்டாவது வாயுவின் அவதாரம் என்பதையும் நன்கு விளக்குகின்றது.

ஆகையால் இதரதைவங்களையும் இதரமதங்களையும் தூஷிக்காமல் ஸ்ரீகண்டாசாரியாள ஸ்ரீகண்டபாஷ்யத்தில் காட்டியிருக்கும் ரீதியை அனுஸரித்துத் தனது தைவமாகிய விஷ்ணுவைப் பூஜிக்கவும், தனது த்வைதமதத்தை ஸ்தாபிக்கவும், பிரவிருத்திக்காமல் கோணல்வழியாக மத்வர் பிரவிருத்தித்திருப்பது கௌதமாதி மஹர்ஷிகளின் சாபம் அவந்தியம் என்பதைக் காட்டவே என்னும் ஆறுவது மத்வாவதாராத்புத லீலாரஹஸ்யம் இத்துடன் முடிந்துவிட்டது. அடுத்த ரஹஸ்யங்கள் அடுத்தாப்போல்வரும்.

சுபம்.

போலகம் சு. ஸ்ரீராமசாஸ்திரிகள்.

ஸ்ரீ நடேசஸ்துதி.

(31-வது பக்கத்தொடர்ச்சி)

उद्यत्फणारत्न विराजमान भूषाभुजङ्गावलिभासमानम् ।
आनम्रदेवावृतकुञ्चिताङ्घ्रिमानन्ददं नौमि सभाधिनाथम् ।

பிரகாசிக்கின்ற படங்களிலிருக்கின்ற சிரோரத்தினங்களால் விளங்குகின்ற ஆபரணபூதங்களான ஸர்ப்பஸமூகங்களால் பிரகாசிக்கின்றவரும் நமஸ்கரிக்கின்றதேவர்களால் சூழப்பட்ட குஞ்சித சரணம் பொருந்தியவரும் ஆநந்தத்தைத் தருகின்றவருமான ஸபாநாயகரை நமஸ்கரிக்கின்றேன். (61)

शैलेन्द्रकन्यामुखचन्द्रबिंब सुधारसास्वादनलोलदृष्टिम् ।
व्याघ्रांबरालंकृतदिव्यदेहसमुज्वलं नौमिमृगाङ्कमौलिम् ॥

பார்வதிதேவியினுடைய முகமாகிற சந்திரபிம்பத்தின் அமிருத ரஸத்தினுடைய பானத்தில் ஆசையுள்ள கண்களையுடையவரும், புலித்தோலால் அலங்கரிக்கப்பட்ட மங்களமூர்த்தியினால் பிரகாசிக்கின்றவருமான சந்திர சூடரை நமஸ்கரிக்கின்றேன், (62)

नाथ त्वच्चरणारविन्दनिकटे विद्योतमानं सदा
श्रीमद्रत्नसभापतिं च भगवन् श्रीचन्द्रमौलीश्वरम् ।
अम्बामम्बुजलोचनां भगवतीं गौरीञ्च वन्देऽन्वहं
स्वर्णाकर्षणभैरवं च फलदं त्वत्पार्श्वगं भक्तितः ॥

ஓ! நாத!! உன்னுடைய சரணகமல சமீபத்தில் பிரகாசிக்கின்ற ரத்தினஸபாபதியையும், சந்திரமௌளீச்வரரையும், பிரகாசிக்கின்ற கண்களையுடைய பரமபூஜ்யயான லோகமாதாவான பார்வதியையும் இடதுபார்ச்வத்தில் பிரகாசிக்கின்ற சகல ஸம்பத்துக்களும் தருகின்ற சுவர்ணாகர்ஷண பைரவமூர்த்தியையும் பக்தியினால் எப்பொழுதும் நமஸ்கரிக்கின்றேன், சுமார் 200-வருஷத்திற்கு முன் தீக்ஷிதசிரேஷ்டர்கள் இந்த பைரவமூர்த்தியினுடைய பாதத்தில் செப்புத்தகடை இரவு அர்த்தஜாம பூஜா சமயத்தில் சாத்தி காலையில் அந்த மூர்த்தியின் பிரபாவத்தால் சுவர்ண மயமான அந்த தகட்டைக்கொண்டு ஜீவநம்செய்தார்களென்று பழமொழி கூறுகின்றார்கள். ஆதலால் சுவர்ணாகர்ஷணபதமானது அன்வர்த்தமாயும் இருக்கின்றது. (63)

श्रीमद्राजसभान्तरेऽतिरुचिरे चिन्ताप्रभाभास्वरे
पीठे रत्नमयेस्थितं गिरिजया साकं नटाधीश्वरम् ।
नानादेशसमागतैर्नरवरैस्तौष्टूयमानं सदा
दृष्ट्वा मामकमानसं पशुपते सम्मोदमाविन्दति ॥

அதிமனோஹரமாயும், விசித்ர சித்திரங்களினால் சோபிக்கின்றதுமான ஸ்ரீமத் ராஜஸபை என்கிற ஆயிரக்கால் மண்டபத்தினுடைய நடுவில் ரத்தினமய பீடத்தில் பார்வதிதேவியோடு பிரகாசிக்கின்றவரும் நானாதேசமிருந்துவந்த பக்த ஸங்கங்களால் ஸ்துதிக்கப்பட்டவருமான நடபதியான உம்மைப்பார்த்து என்னுடைய மநம் மிக ஸந்தோஷத்தை அடைகின்றது, இப்பவும் ஆனி,

மார்கழி, தரிசனஸமயத்தில் ஸஹஸ்ரஸ்தம்பமண்டபத்தில் ஸ்ரீமதாநந்த நடராஜ திவ்யமங்களமூர்த்தியைத் தரிசிக்கின்ற பக்தகோடிகளுக்கு ஸந்தோஷம் உண்டாகிறது என்பது அநுபவவேத்யமாகும். (64)

नाथ त्वत्पदपङ्कजे मम दृढा भक्तिः कदा संभवेत्
किंचानिष्टनिवारणैकनिपुणा जायेत दीने कृपा ।
जित्वा काममुखारिवर्गमखिलं वैराग्यभाक्स्यामहं
जन्मव्याधिविवर्जितश्च भगवन् भव्यं कदा प्राप्नुयाम् ॥६५॥

ஓ! நாத!! உம்முடைய சரணகமலத்தில் அசஞ்சலமான பக்தியானது எப்பொழுது எனக்கு உண்டாகும். ஸகல அனிஷ்டங்களையும் நிவர்த்திசெய்கின்ற உம்முடைய க்ருபையானது தீநனுன எனக்கு எப்பொழுதுகிடைக்கும். காமக்குரோதாதிகளான அகில சத்ரு சமுகத்தையும் ஜயித்து பரம வைராக்யத்தை எப்பொழுது அடைவேன், அநேக ஜன்மகோடி புண்யங்களால் பரமசிவ பக்தி ஏற்படுகிறதென்றும், அந்த பக்தியால் பரமசிவனுடைய கிருபை ஜனிக்கவேண்டியதென்றும், அந்தக் கிருபையால் பரமவைராக்யம் ஜனிக்கும் என்றும் அந்த வைராக்யத்தால், நித்தியாநந்தரூபமாக மோக்ஷசுகம் ஏற்படும், என்றுமுள்ள சாஸ்திரீய கிரமத்தை இந்த ஸ்துதியால் நிரூபித்திருக்கிறார். (65)

नाथ त्वच्चरणारविन्दममलं कैवल्यसन्दायकं
स्वामिन्मन्त्रवरेण्यनूपुररुचा संशोभमानं विभो ।
वाणीशादिसुपर्वभिर्मुनिगणैश्चासेव्यमानं सदा
व्याघ्रागारनिवासलोल भगवन् लप्स्ये कदाऽहं प्रभो ॥

ஓ நாத ஓ விபோ ஓ சிதம்பரவாஸப்ரியா! ஓ ஸ்வாமின், மோக்ஷஸுகத்தைத் தருகிறதும் மந்திர சிரேஷ்டரூபமான பாதஸரங்களுடைய காந்தியால் சோபிக்கின்றதும் பிரும்மதேவன்முதலான தேவர்களாலும் முனி கணங்களாலும் எப்பொழுதும் சேவிக்கப்பட்டதுமான உம்முடைய திவ்ய சரணாரவிந்தத்தைநான் எப்பொழுது அடையப் போகின்றேன். (66)

भीतिं त्वं विजहीहि तावकगुणैः प्रीतोऽस्म्यहं वत्स मां
नूनं प्राप्स्यसि मुञ्च खेदमधुनेत्याश्वासयन् मां प्रभो ।

वाण्या हर्षसमुत्थया नटपते मन्मानसस्यातुलं
सम्मोदं जनयिष्यसीश भगवन् दीनार्त्तिहारिन् कदा ॥

தீனர்களுடைய கஷ்டங்களை நிவர்த்திசெய்கின்ற ஓ பிரபுவே! ஓ நடநாயகா! ஓ பகவன்! நீ பயத்தைவிடு, ஓ வத்ஸனே! உன்னுடைய குணங்களால் பிரீதி அடைகிறேன், என்னை அடையப் போகின்றாய் துக்கத்தை விடுஎன்று ஸந்தோஷத்தினால்உண்டான வார்த்தையினால் என்னை ஆச்வாஸப்படுத்தி என்னுடைய மனதுக்கு அதிக ஸந்தோஷத்தை எப்பொழுது உண்டுபண்ணப் போகிறீர். (67)

त्वद्भक्तिसेतुमवलम्ब्य विलंघ्य वेगात्
संसारवार्द्धिमभिगम्य भवत्सकाशम् ।
त्वत्पादपद्मवसतिं मुनिबृन्दलभ्यां
सत्यं लभेय नटनाथ कदा वदाहम् ॥

ஓ நடநாயகா உன் பக்தியாகிற ஸேதுவை ஸஹாயம் வைத்துக் கொண்டு ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தை வேகத்தினால் தாண்டி உம்முடைய ஸமீபத்தை அடைந்து முனிகணங்களால் அடையத் தகுந்த உம்முடைய சரணகமல வாஸத்தை நான் எப்பொழுது அடைவேன் சொல்லும். (68)

जाने नो जनने गते सुचरणो यज्ञेश दुष्कर्मकृत्
जाने किन्तु कृतं द्वयं नटपते मानुष्यलब्धिर्यतः ।
पुण्याधिक्यमवैमि तव भगवन् सद्वंशजन्मा ततः
त्वत्पादार्चनतो भवेज्जनिपथे खिन्नस्य मे निर्वृतिः ॥६४॥

ஓ எக்ஞநாதா, சென்ற ஜென்மத்தில் புண்யகர்மாவைச்செய்தவனாகவும் இல்லை. பாபகர்மத்தை செய்தவனாகவும் இல்லை, மநுஷ்ய ஜென்மா எற்பட்டிருப்பதால் புண்யபாபம் இரண்டும் செய்தவனாக ஆகிறேன்(புண்யபாப கர்மாக்களால் மநுஷ்யலோகத்தை அடைகிறான் என்றல்லவோ சுருதிவாக்யம்) ஓ நடபதே பிராமணோத்தமர்களான தீக்ஷித ஸத்குலத்தில் ஜனித்ததால் புண்ய ஆதிக்யம் இருக்கிறதென்றும் அறிகிறேன். ஸம்ஸாரமார்க்கத்தில் துக்கத்தை அடைந்த எனக்கு உம்முடைய சரணபூஜையினால் ஸுகம் உண்டாகவேணும். (69)

त्वद्भक्त्यैव सभेश मृत्युमजयत् धीमान्मृकण्डुवात्मज:
त्वद्भक्त्यैव नरर्षभा नटपते जानन्ति तत्वं परम् ।
त्वद्भक्त्यैव हि लेभिरे सुरवरा: सर्वेपि सर्वं फलं
तस्मान्मामकवाञ्छितं पशुपते किंवानदेयं विभो ॥७०॥

புத்திமானான மார்க்கண்டமகரிஷியானவர் ஓ ஸபாபதே உம்முடைய பக்தியினாலேயே எமனை ஜயித்தார், ஓ நடநாதா நரசிரேஷ்டர்களானஜநகராஜா முதலானவர்கள் உம்முடைய பக்தியினாலேயே தத்வார்த்தத்தை அறிகின்றார்கள். ஸமஸ்த தேவசிரேஷ்டர்களும் உம்முடைய பக்தியினாலேயே அமிருதலாபம் முதலான ஸமஸ்த்தபலத்தையும் அடைகின்றார்கள். ஓ! பசுநாயகா!! ஓ! விபோ!! என்னுடைய இஷ்டத்தைக் கொடுத்து அருள்செய்வீர்.

(தொடரும்.)

சிதம்பரம் ராஜா சோமசேகர தீக்ஷிதர்.

தீண்டாதார்களின் முன்னேற்றம்.

தீண்டாதார்களின் தாழ்ந்த நிலையைப்பற்றி ஜாதி ஹிந்துக்களைக் குறைகூறுவது விதிவசத்தால் ஏற்பட்ட ஓர் ஆச்சரியமே. தீண்டாதார்களுக்கு ஜாதி ஹிந்துக்கள் புதிதாகவோ அன்றி பழைய ஸ்திதி கெடும்படியாகவோ ஏதேனும் தீங்குகள் இழைத்திருந்தார்களேயானால் அவர்கள்பேரில் குறை கூறுவது தகும். ஜன்மாந்தரத்தில் அவரவர்கள் செய்த பாபபுண்ணியங்களின் பலனாகவும் இந்த ஜென்மத்தில் அவர்கள் செய்யும் கருமங்களாலும் அவரவர்கள் கஷ்டங்களையோ, சுகங்களையோ அனுபவிக்க வேண்டியவர்கள் என்பது ஜாதி ஹிந்துக்களின் பிரதானக் கொள்கை. தீண்டாதார்களின் தற்கால நிலைமையைப் பற்றி பரிவாய்ப் பேசுகிறவர்கள் லோகோபகாரிகள் எனப் பெயர்பெற்றுவிடுகிறார்கள். அவர்கள் கஷ்டங்களைப் நிவர்த்திக்கும் விஷயத்தில் அவ்வளவு எளிதாய் பெயர்பெற முடியவில்லை. சீர்திருத்தக்காரர்கள் ஜாதி ஹிந்துக்களின்மேல் வீண்தோஷம் மாத்திரம் உண்டுபண்ணுகிறார்கள். இதர மனிதர்களின் ஆழ்ந்த புத்திப்போக்குகளையும்,

ஸ்வபாவ குணங்களையும் அடியோடு மாற்றுதலென்பது ஸாமான்னிய மனிதர்களால் ஆகக்கூடிய காரியமல்ல. ஸுக துக்கங்களை வெறுத்த ஞான வைராக்கிய ஸம்பன்னர்களான மஹான்களே அவ்வித காரியத்தைக்கைக்கொள்ள வல்லவர்கள் தாழ்ந்தவர்களை மேல்நிலையை அடையச் செய்வது, ராஜீய கிளர்ச்சிக்காரர்களும் வெறும் பிரசார நிபுணர்களும் ஸாதிக்கக்கூடியதல்ல. தீண்டாதார்கள் ஐஹிகவாழ்வில் அற்ப நிலைமையிலிருக்கிறார்கள் என்பது யாவரும் அறிந்ததே. அந்நிலைமையில் இருக்கக்கூடாது என்று விரும்புவதும் ஸகஜமே. அது வெகு அநியாயம் என்றுசொல்லி ஆத்திரப்படுவதும் ஸுலபமே. ஆனால் அந்த நிலைமைக்கு ஆரம்பக் காரணம் என்ன என்று உண்மை நிலையிலிருந்து ஆராயவேண்டும். அகங்காரத்துடனும், ஆக்ரோசத்தோடும்கூடிய புத்தியுடன் ஆராய்ச்சி என்பது ஆகாது. தற்போது தீண்டாதார்கள் முன்னேற்றமடையச் செய்வதற்கெனப் பண்ணும் பிரசங்கங்களால் என்ன பலன் ஏற்பட்டது? தாம் உயர்பதவிக்கு வரவேண்டுமென்றும், வாழ்க்கை ஸுகஸாதனங்களை விரிவாய் அடைய வேண்டுமென்றும் ஒரு தீவிர ஆசையை மாத்திரம் கிளப்பிவிட்டிருக்கிறது. அந்த ஆசையை நிஜமாய்ப் பூர்த்திசெய்ய வாய்ப்பேச்சுக்காரர்கள் ஒன்றும் செய்திருக்கவில்லை, குரோதமும், சச்சரவும், துக்கமுமே பலனாக முடிந்திருக்கிறது. பொருளாதார ராஜீய விஷயங்களில்கூட சரியான காரணத்தாலோ, வேறாலோ, தீண்டாதார்களில் பெரும்பாலோர் ஸ்ரீமான் காந்தியவர்களிடம் கூட நம்பிக்கையில்லை எனச் சொல்லி, அன்னவரின் உபதேச மொழிகளை அனுசரிக்க மறுக்கிறார்கள். இச் சந்தர்ப்பத்தில் தீண்டாதார்களை முன்னேற்றுவதாகச் சொல்லிக்கொண்டு ஹிந்துக் கோவில்களில் தீண்டாதார்களை கூட்டபலத்தாலும் கூக்குரல் பலத்தாலும், நுழையத் தூண்டுவதும், தர்மானுஷ்டான ஸம்பிரதாயங்களை இகழ்ந்துபேசத் தூண்டுவதும், பிறர் சொத்து உரிமைகளைத்தாக்கும்படி ஏதுவுமான காரியங்கள் மிகவும் அனர்த்தகரமானவைகளென்று யாவரும் உணரவேண்டும்.

வெங்கட்ராம ராவ்.

வஸ்துவிசாரம்.

स्वरूपप्रतिपादिकां ब्रह्मविद्यां ब्रूहि । (வராஹோபநிஷத்)

வஸ்து, பரமாத்மா, புருஷோத்தமன் என்று கொண்டாடப்படுகிற யாதொரு ப்ரம்மமுண்டோ, அதை ஸாக்ஷாத்கரிக்க எண்ணங்கொண்டுவெகுகாலம் தபஸ்ஸுசெய்துகொண்டிருந்தஓர் மஹரிஷிக்கு பிரத்தியக்ஷ தர்சனம்கொடுத்த புருஷோத்தமனை வந்தனங்களாலும், ஸ்துதிகளாலும், உபசரித்து உம்முடைய ஸ்வரூபத்தையே பிரதிபாதநஞ்செய்கிற யாதொரு ப்ரம்ம வித்தையுண்டோ அதைச் சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்கிறார்.

மஹரிஷியின் முன்தோன்றின பகவான் ஸாவதான மனதுடன் கேட்கும்படி அவருக்குச் சொல்லி தத்துவங்களை எடுத்து உரைக்கிறார். சில அதிகாரிகள் இருபத்துநான்கு தத்துவங்களைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறார்கள். சிலர்கள் முப்பத்தாறைத் தெரிந்துகொள்ளக் கருதுகிறார்கள். மற்றும் சிலர்கள் தொண்ணூற்றாறையுமே அறிய விரும்புகிறார்கள். கிரமமாய் அவைகளை எடுத்துரைக்கிறார்.

முதலாவது இருபத்துநான்கு தத்துவங்களுக்கு விபரம்:— ஞானேந்திரியங்கள் ஐந்து— சுரோத்திரம்(காது) துவக்கு(தோல்) சக்ஷுஸ் (கண்) ஜிஹ்வை (நாக்கு) கிராணம்(மூக்கு). கர்மேந்திரியங்கள் ஐந்து:—வாக்கு (வாய்) பாணி (கை) பாதம் (கால்) பாயு (தேகம்) குஹ்யம் (ஜனனேந்திரியம்). பிராணங்கள் ஐந்து:—பிராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன். தன்மாத்திரைகள் ஐந்து:—சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம். அந்தக்கரணம் நான்கு— மனது, புத்தி, அகங்காரம், சித்தம். ஆக தத்துவங்கள் இருபத்துநான்கு. அவைகளை ஆத்மவிசாரம் செய்பவர்கள் தெரிந்துகொள்ளுகிறார்கள்.

இரண்டாவது முப்பத்தாறு தத்துவங்களுக்கு விபரம்:— பஞ்சீகரணம் செய்யப்பட்ட பூதங்கள் ஐந்து— பிருதிவீ (மண்) ஆப: (தண்ணீர்) தேஜ:(நெருப்பு)வாயு(காற்று) ஆகாசம்(ஆகாயம்). தேகங்கள் மூன்று— ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம். அவஸ்தைகள் மூன்று— ஜாகரிதம்(நனவு) ஸ்வப்பனம் (கனவு) ஸுஷுப்தி (உறக்கம்). ஈசுவரன் ஒன்று. ஆகத் தத்துவங்கள் முப்பத்தாறு. அவைகளை முனிகள் தெரிந்துகொள்கிறார்கள்.

மூன்றுவது தொண்ணூற்று தத்துவங்களுக்கு விபரம்:— முன்னே சொல்லப்பட்டத் தத்துவங்களினின்றும் வெளிப்படும். கூடுதல் தத்துவங்களாவன:—ஷட் (ஆறு) பாவவிகாரங்கள்:— அஸ்தி (இருத்தல்) ஜாயதெ (உண்டாதல்) வர்த்ததே (வளருதல்) பரிணமம் (திரிதல்) க்ஷயம் (குறைதல்) நாசம் (நசித்தல்) ஷட்(ஆறு) ஊர்மிகள். அசனம் (பசி) பிபாஸை (தாகம்) சோகம் (துக்கம்) மோகம் (அறியாமை) ஜரை(கிழத்தனம்) மிருதி (மரணம் ஷட் (ஆறு) கோசங்கள்:— துவக் (தோல்)ரக்தம்(குருதி) மாம்ஸம் (ஊன்) அஸ்தி (எலும்பு) ஆறு அரிஷட் வர்க்கங்கள்:—காமம்' குரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸரியம், ஜீவன் மூன்று— விசுவன், தைஜஸன், பிராக்ஞன், குணங்கள் மூன்று:—ஸத்துவம், ரஜஸ், தமஸ். கர்மங்கள் மூன்று:—பிராரப்தம், ஆகாமி, ஸஞ்சிதம் வசனம்முதலியன ஐந்து:—வசனம், ஆதானம், ஸஞ்சாரம், விஸர்க் கம், ஆனந்தம், ஸங்கல்ப்பம் முதலியன நான்கு:—ஸங்கல்ப்பம், நிச்சயம், அபிமானம், ஸ்மிருதி, ஸந்தோஷம்முதலியனநான்கு:— ஸந்தோஷம், தயவு, சிநேகம், அசட்டை, தேவதைகள் பதினுங்கு திக்கு, வாயு, ஆதித்தியன், வருணன், அசுவினி, வன்னி, இந் திரன், உபேந்திரன், மிருத்யு, பிரம்மா, சந்திரன், சதுர்வக்திரன் ருத்திரன், க்ஷேத்திரக்ஞன், ஆக தத்துவங்கள் தொண்ணூற்று விசேஷமாகக் கொண்டாடப்படுகின்றன.

மகாதபஸ்வியான மஹாிஷிக்கு தொண்ணூற்று தத்துவங் களையும் பிரத்தியக்ஷமாய் உபதேசித்த கருணாமூர்த்தியான பக வான் உபரியும் வெளியிடுகிறார். முன்னே சொல்லப்பட்ட தத்து வங்களுக்கு விலக்ஷணனும், அனுமயனும், இருக்கிற என்னை எவர்கள் என்னிடத்திலேயே ஏகமனதுடன்பக்தி வைத்து உபா ஸிக்கிறார்களோ அவர்கள் ஜீவன் முக்தர்களாக ஆகிறார்கள். இவ்விதமாக தொண்ணூற்று தத்துவங்களின் உண்மையைத் தெறிந்தவர்கள் எந்த ஆசிரம தர்மத்திலிருந்து அனுஷ்டித்துக் கொண்டிருந்தாலும், ஜடீ (ஜடையோடுகூடின வானபிரஸ்தாசிரம தர்மி) முண்டீ (சிரஸில் பூரா உரோமங்களையும் களைந்த யதி ஆசிரம

தர்மி) சிகி (சிரசில்) சிகை (குடுமி) யோடுகூடின கிரகஸ்தாசிரம தர்மி) ஜன்ம ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபடுகிறார்கள். ஸந்தேக மில்லை என்று அனுக்கிரகிக்கிறார். அடியிற்கண்ட சுலோகமும் இங்கு கவனிக்கத்தக்கது.

अनन्याश्चिन्तयन्तेमां ये जनाः पर्युपासते ।
तेषांनित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥

ராமபத்திர அய்யர்.

மநுஸ்மிருதி அத்தியாயம்-2
சில வசனங்கள். (1—10)

1. வேதமறிந்தவர்களால் அனுசரிக்கப்படுகிறவும், ராகத்வேஷ மற்ற ஸத்புருஷர்களால் சிரேயஸ்கரமென்று முழு மனதோடு அங்கீகரிக்கப்படுகிறவுமான தர்மத்தைதெரிந்துகொள்ளவேண்டும்.

2. பிரதி பிரயோசனத்தை நாடியே காரியம் செய்வது மெச்சத்தக்கதல்ல. இவ்வுலகில் விருப்பமின்மை என்பதுமில்லை. பல விருப்பத்தைப் பொருத்துத்தான் வேதாத்யனமும், வைதிக கர்மானுஷ்டானமும் இருக்கின்றன.

3. எந்த காரியமும் அதற்கேற்ற பலனை கொடுக்கும் ஸத் காரியம் ஸத்பலனைக் கொடுக்கும். இவ்வெண்ணத்தால் யாகங் கள் செய்யப்படுகின்றன. இவ்வெண்ணமே ஸமஸ்தவிரத, நியம தர்மங்களுக்குக் காரணம்.

4. இவ்வுலகில் எப்பொழுதும் ஏற்படும் எந்தகாரியமும் பிரதிபல விருப்பமின்றி ஆகிறதில்லை. மனிதன் செய்யும் வைதிக லௌகிக காரியம் எல்லாம் பல இச்சையால்தான் ஏற்படுகிறது.

5. சாஸ்திரப்படி கர்மானுஷ்டானம் ஒழுங்காய் செய்கிறவன் மோக்ஷமடைவான். இவ்வுலகிலும் அவனுக்கு பூர்ண இஷ்ட ஸித்தியும் உண்டாகும்.

6. ஸமஸ்தவேதமும் தர்மத்திற்கு மூலம்-வேதமறிந்த மனு முதலிய ஞானிகள் காட்டிய விதிகள், ராகத்வேஷமின்மையு

முதலிய நல்லொழுக்கம், தார்மிகர்களுடைய ஆசாரம் ஆத்ம திருப்தி, இவைகளும் தர்மபிரமாணம்.

7. எவருக்கு எந்த தர்மங்களை, மனு, ஸ்மிருதியில் காட்டி இருக்கிறாரோ அவையெல்லாம் பூர்ணமாய் வேதத்தில் இருக்கின்றன. ஏனென்றால் மனு ஸர்வக்ஞர், எல்லாவற்றையும் உணர்ந்தவர்.

8. படித்தவர் எவரும் தன் ஞானத்தை பூர்ணமாய் உபயோகித்து மனு விதிகளை முழுமையும் ஆராய்ச்சிசெய்து வேத விதிப்படி தங்களுக்கு ஏற்பட்ட தர்மங்களை கைகொள்ளவேண்டும்

9. சுருதி ஸ்மிருதி இவைகளில் சொல்லியபடி தர்மானுஷ்டானம் செய்கிறவர்க்கு இந்த ஜன்மாவில் கீர்த்தியும் இறந்த பிறகு மோக்ஷாநந்தமும் கிடைக்கும்.

10. சுருதிஎன்றால் வேதம், ஸ்மிருதிஎன்றால் தர்மசாஸ்திரம். எந்த விஷயத்திலும் இவ்விரண்டும் விதிப்பதை மறுக்கக்கூடாது. இவ்விரண்டிலிருந்துதான் நம்முடைய மதாசாரவிதிகள் வெளிப்பட்டிருக்கின்றன.

R. ஸ்வாமிநாதய்யர்.

சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

பீஷ்மர் 2.

1. சந்தனுராஜனுக்கு கங்கையினிடம் பிறந்தவர் இவர். இவர் த்யோ எனும் எட்டாவது வஸு. கங்காபுத்ரனுகையால் காங்கேயன் என்று இவருக்குப் பெயர். தேவவ்ருதன் என்றும் ஓர் பெயருண்டு. வஸிஷ்டரிடம் எல்லா வித்யைகளையும் கற்றார் இவர் தந்தை சந்தனு ஒருஸமயம் யமுனு நதிக்கரைக்குப் போனர். அங்கு ஒரு அழகான வாஸனை வந்தது. அந்த வழியாக வந்து யோஜநகந்தி அல்லது ஸத்யவதி என்பவளைப் பார்த்தார்.

2. அவள் ஓர்செம்படவ கன்யகை. அவள்தகப்பனிடம்போய் இப்பெண்ணை எனக்கு கொடுயென்று சந்தனுகேட்டார். வேடன் அரசனே! நான் கேட்கும் வரத்தைக் கொடுத்தால் இவளைக் கொடுப்பேன் என்ருன். என்னவரம் கேட்பாயோ? அதை அறியாமல் வரம் கொடுத்துவிட்டால் பின்னுல் அது செய்யக்கூடாத தானுல் கஷ்டம். வரத்தைச்சொல் என்ருர். இவள்வயிற்றில் பிறந்த பிள்ளைக்கே ராஜ்யத்தைக் கொடுக்கவேண்டும் என்ருன்.

3. தர்மிஷ்டனுன மூத்தபிள்ளைதேவவ்ரதனுக்கு ராஜ்யம் கொடுக்காமல்இவனுக்குக்கொடுப்பது தர்மமா? தசரதரைப்போல் வரம்கொடுத்துவிட்டுமுழிக்காமல்சந்தனுமுன்னையே கேட்டுவிட்டான். முன் யோஜனைசெய்யாமல் பேசிவிடலாமா? சந்தனு செம்படவனுக்கு பதில் சொல்லாமல் வந்துவிட்டான். ஏன்? காமத்திற்காக தர்மத்தைக் கைவிடலாமா? ஆனுல் அவள் ஆசை இவனை விடவில்லை.

4. ஆசை உண்டானுல் பின்னுல் துக்கம் உண்டாவது ஸஹஜந்தானே? சந்தனுவுக்கு ஸதா அவள் சிந்தைதான். நினைத்து நினைத்து வருத்தப்படுவான். கண்ணீர்விடுவான். வெருத்து இளைத்துவிட்டது அவன் சரீரம். தன் தந்தை முன்போல் ஸந்தோஷமாக இல்லாமலிருக்க என்னகாரணம் என்று ஸாரதி மூலமாக தேவவ்ருதன் அறிந்தான். எப்படியாவது பிதாவிற்கு அந்த பெண்ணைக் கல்யாணம் செய்துவைப்பது என்று தீர்மானித்தான்.

5. உடனே செம்படவனிடம்போய் தன் தந்தைக்கு அவளைக் கொடுக்கும்படி கேட்டான். செம்படவன், ராஜகுமார! உபரிசரவஸு என்பவருடைய பெண் இவள். இவளுக்கேற்ற புருஷன் உன் பிதா. ஆனுல் இவள் பிள்ளைக்கு ராஜ்யம் கொடுப்பதானுல்தான் அவருக்கு இவளைக்கொடுப்பேன் என்ருன். தேவவ்ருதன் ஸரி! அப்படியானுல் எனக்கு ராஜ்யம் வேண்டாம் அவள் பிள்ளைக்கே கொடுக்கிறேன் என்ருர்.

6. அதைக் கேட்டு ஸந்தோஷமடைந்தானவன். ஆனுலும் அவனுக்கொரு ஸந்தேஹம் வந்தது. இவர் பித்ரு பக்தியால் ராஜ்யம் வேண்டாமென்கிருர். இவர் பிள்ளை ராஜ்யத்தை வேண்டினுல் சாஸ்த்ரப்படி அவனுக்குதானே ராஜ்யம் போய்விடும் என்று எண்ணினுன். ராஜகுமாரரே! நீர் ராஜ்யத்தில் ஆசைப்

படாவிட்டாலும் உன்பிள்ளை கேட்டால் என்னசெய்வது? என்று செம்படவன் கேட்டான்.

7. தேவவ்ரதர் உடனே எழுந்து என்பிதாவுக்காகவேண்டி நான் கல்யாணம் செய்துகொள்ளப்போவதில்லை. நித்ய ப்ரும்ம சாரியாகவே இருக்கப்போகிறேன், இது ஸத்யம். யான் உடலில் உயிர் உள்ளமட்டும், சொன்னசொல்லைத் தவாமாட்டேன். இதற்கு தேவர்களே ஸாக்ஷி என்று ப்ரதிக்ஞைசெய்தார். இதைக் கேட்டதும் செம்படவனுக்கு மயிர்க்கூச்சலுண்டானது.

8. ஸத்யவதியைச் சந்தனுவுக்குக் கொடுக்கிறேனென்றான். ஆகாசத்திலிருந்து தேவவ்ருதன் தலையில் தேவர்கள் புஷ்பமாறி பொழிந்தார்கள். உன் கடுமையான பித்ருபக்தியைக் கண்டு அஞ்சுகிறோம். எவனையும் பயப்படுத்துபவன் நீ என்று தேவர்கள் அன்றுமுதல் 'பீஷ்மர்' என்று அவருக்குப்பெயர் வைத்தார்கள். இந்த விஷயத்தைக் கேட்டு சந்தனு மிகவும் வருந்தினான்.

9. ஆனாலும் சந்தனு அவளை மணந்துகொண்டார். பீஷ்மனது பிதிரு பக்தியைக்கண்டு ஆச்சரியமடைந்தார். தனக்குத் தெரியாமல் தனக்கு உபகாரம் செய்ததை நினைத்து நினைத்து ஸந்தோஷப்பட்டார். இளம்வயதில்பிள்ளை ஆசையை ஜயித்தான். வயதான நான் பெண்ணாசை வைத்தேனே! என்று வெட்கப் பட்டான்.

10. பீஷ்மனுக்கு நீநினைத்தபோது உனக்கு மாரணமுண்டாகும். யமனுக்கு நீ விரும்பும்வரை அதிகாரமில்லை என்று வரம் கொடுத்தார். இவரது பித்ரு பக்தியைக்கொண்டாடாதவர்இல்லை.

வாரவிருத்தாந்தம்.

ஹிம்ஸிக்கக்கூடாது. திருவண்ணைநல்லூரில்குரங்கு உபத்ரவம் அதிகமாக இருப்பதால் அதை அகற்றவேண்டுமென அவ்வூரார் அரசாங்கத்திற்கு அறிவித்தனர். அவைகளை சுட்டுத்தள்ள அவ்வூரார் காரணமாக இருக்கலாகாது. அவ்வூரில் ஒருவர் குரங்கை சுட்டுக்கொன்றதால் ஸந்ததிஅற்றிருந்ததாகவும், ஓர்கிருஸ்தவ அதிகாரி அதேபோல் குரங்கைச் சுட்டதால்அவன்குழந்தை

இறந்தது. ஆகலால் அவர் சுட்ட குரங்கைப் புதைத்து ஊரார் அங்கே ஆஞ்ஜநேயர் கோவில்கட்ட, அங்கே இவர் அபிஷேகா திகள் செய்துவைத்ததாகவும் அறிகிறோம். ஜீவஹிம்ஸை செய்வது அதர்மம்.

முக்யமான கார்யம். 30உ காசியிலுள்ள ஓர் ஸபையார் காசியைக்காக்க, தனம்தேவை என்றுப்ரார்த்தித்து பத்ரிகைகளுக்கு எழுதியிருக்கிறார். கங்கையைத்துதிக்காத புராணமில்லை. கலியில் ஸகல பாபத்தையும் அகற்ற அஃதொன்றே ஸுலபமான ஸாத னம். கங்கைக் கரையின் அருகிலுள்ள கட்டடங்கள் ப்ரவாகத் தால் உள்ளே அழிந்துவிடுகின்றன. அதை ரக்ஷிக்க 70லக்ஷம் ரூபாய் வேண்டுமாம். ஸத் விஷயத்தில் தனத்தை விநியோகம் செய்ய எவருக்கு பாக்யமிருக்கிறதோ?

ஒன்று ஒழிந்தது. 4உ டில்லி சபையில் விதவைகளுக்கு விபாகம் கொடுக்கவேண்டும் என்ற சட்டம் 55 ஓட்டுகளால் நிரா கரிக்கப்பட்டது. மற்றும் சில சட்டங்கள் காத்திருக்கின்றன. ஆஸ்திகர் ஆங்காங்கு கூடி அதைக் கண்டித்துத் தக்க முயற்சி செய்தால் அவைகளும் அழியலாம்.

நல்ல யோசனை. 8உ திருச்சியில் ஸர். டி. தேசிகாசாரியாரின் தலைமையில் கான்பகதூர் ஸையத் அப்துல்கரீம் என்பவர் ஹிந்து மஹம்மதிய மதஸ்தர்களின் பெருமையை விளக்கி இரண்டிற்கும் உள்ள ஸ்நேகபாவத்தை வளர்க்க இருமதத் தலைவர்களும் கூடி இடையில் தோன்றும் கசப்புகளை அகற்றவேண்டுமென்றார். ஹிந்து ஆலயங்களுக்கு மஹம்மதிய அரசர் மான்யமளித்ததையும் மசூதிக்கு இந்திய மன்னர் அளித்ததையும் குறிப்பிட்டார். இது போன்ற உபன்யாஸமும் நல்லெண்ணமும் பொறுமையும் உண் டானால் வீண்சண்டை தோன்றாது.

வேண்டியதே. 6உ கும்பகோணத்தில் புரந்தரதாஸ்திநம் கொண்டாடப்பட்டது. ப்ராமண ஸமாராதனை நடந்தது. பாட் டுக் கச்சேரியும் நடந்தது. பக்தாது சரித்த்தை விளக்கி உபன் யாஸம் நடந்திருத்தல்வேண்டும். புதுக்கோட்டையில் 31உ திரு நீலகண்ட நாயனார்திநம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

புத்தகவரவு மதிப்புரை.

மோக்ஷவழி.

மோக்ஷவழியென்ற புஸ்தகமும் நமது பார்வைக்கு வந்தது. ஸர்வ ப்ராணிகளும் மோக்ஷத்தையே விரும்புகிறார்கள். ஆனால் அவர்களுக்கு அதன் வழி புரிவதில்லை. அந்த வழியைக்காட்ட ஒரு உபாயம் கிடைத்தால் எவ்வளவு உபகாரமாயிருக்குமென்பது மோக்ஷாசை மேலிட்டவர்களுக்குத் தெரிவதுபோல் மற்றவருக்குத் தெரியாது. ஆயினும் யாவருமே எளிதில் இதைத் தெரிந்துகொள்வதற்காகவே தற்காலத்திற்குத் தக்கபடி ஸர்வமத ஸாதாரணமாய் எளிய தமிழ் நடையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இது ஈச்சம்பாடி பிரும்மஸ்ரீ வெங்கிடேச சர்மாவால் இயற்றப்பட்டது. இதைப் படிக்கும் பொழுதுதான் இதன் அருமை தெரியும். அதனால் யாவரும் வாங்கிப்படித்து அனுஷ்டித்து நற்கதிபெறவேண்டுமென்ற கிரந்த கர்தாவின் கோரிக்கையும் பூர்த்தி செய்தால் ஸ்வாத்துமலாபம் கிடைக்கிறது. இது ஸ்ரீமான் நே. ஈ. துறைஸாமி அய்யங்கார் அவர்களால் வெளியிடப்பட்டது. ஸம்ஸ்கிருத—தமிழ் அகராதி முழுப் புஸ்தகத்தை வாங்குவோருக்கு இது இனாமளிக்கப்படும். இதைமாத்திரம் வாங்க விரும்புவோருக்கும் ஸ்வல்ப்ப கிரயந்தான் வைக்கப்பட்டிருக்கிறது. விலை அணா பன்னிரண்டே. தபால் சார்ஜ் அணா 4. கீழ்க்காட்டிய விலாஸதாரிடமே கிடைக்கும்.

பத்திராதிபர்.

ஸம்ஸ்கிருத தமிழ் அகராதி.

"ஸம்ஸ்கிருத தமிழ் அகராதி" என்ற புஸ்தகம் வரப்பெற்றோம். அது இக்காலத்தில் மிக அவசியம். புருஷார்த்த ஸாதனங்களை போதிக்கும் நூல்கள் பெரும்பாலும் ஸம்ஸ்கிருத பாஷையிற்றான் விவரிக்கப்பட்டிருக்கின்றன. பூர்வ யுகங்களில் பாரத நாடெங்கும் வானவர் நாட்டில்போல் ஸம்ஸ்கிருதபாஷையே ஸர்வ வியவஹாரங்களுக்கும் ஆர்யர்களால் வழங்கப்பட்டுவந்தது. அப்

பொழுது ஸம்ஸ்கிருத சப்தங்களின் அர்த்தம் நிகண்டு, நிருக்தம் முதலியவைகளினின்றே அறியப்படுவது எளிதாயிருந்தது. காலக்கிரமத்தால் ஆர்யபாஷை ஆரியர்களிடத்திலும் அரிதாய்விடவே ஸம்ஸ்கிருத சப்தங்களின் அர்த்தத்தை தேசபாஷையிலிருந்தே தெரிந்துகொள்ளவேண்டியதாயிற்று. அதற்காகவே "பாஷாமஞ்சரி" பதார்த்த பாஸ்கரம் முதலிய சிறிய நூல்கள் வெளியிடப்பட்டன. ஆயினும் அவை மிகச் சுருக்கமானதும், சாஸ்திரங்களில் வழங்கப்படும் பதங்களின்பொருள்களைப் போதிக்கப் போதாமலும் இருந்தபடியால் நம்தமிழ்நாட்டில் இத்தகைய ஓர் அகராதி மிக அவசியமானது, என்பதை உணர்ந்தே உபகாரார்த்தமாய் இந்த "ஸம்ஸ்கிருத தமிழ் அகராதி" அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. இது திருமல்ராஜபுரம் ஜமீன்தாராகிய பிரும்மஸ்ரீ வெங்கடேச சர்மாவால் இயற்றப்பட்டு நேமம் கிருமம் பிருமஸாயுஜ்ய லைப்ரரி மானேஜர் ஸ்ரீமான் ஸ்ரீ உ-ப-வே. நே ஈ. துரைஸ்வாமி அய்யங்கார் அவர்களால் வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் கிரந்தகர்த்தா அவர்கள் அனேக நூல்களைப் பார்த்து ஆதாரம் கண்டுபிடித்துப்போடுவதற்காகப் பட்ட சிரமம் இதைப் பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். அப்படி தனது சிரமத்தைக் கிஞ்சிற்றேனும் கவனிக்காமல் லோகோபகாரமேபெரிது என்ற எண்ணத்துடன் இக் கார்யத்தில் இறங்கியவர்களுக்கு அதை வாங்கிப் படிப்பதைவிட வேறு எந்த பிரத்யுபகாரத்தை ஜனங்கள் செய்யப்போகிறார்கள். சில நாட்டுப்புறத்தாருக்கு, நாகரலிபி தெரியாதோ என்று கிரந்தலிபியிலேயே பதங்கள் கோர்க்கப்பட்டிருக்கின்றன. இதை நன்றாய்ப் பார்த்தால் ஸர்வசாஸ்திர ஸங்கேதங்களையும் ஸுலபமாகத் தெரிந்துகொண்டுவிடலாம். இந்த நூல் இரண்டு பாகங்களாக அமைக்கப்பட்டது. இரண்டு பாகங்களுமாகச் சேர்ந்து 444-பக்கங்களிருக்கின்றன. விலை குறைந்தது. முகவுரையில் பல விசேஷங்களுள்ளது. ஸ்ரீமான் நே ஈ, துரைஸ்வாமி அய்யங்கார், ப்ரம்மஸாயுஜ்யலைப்ராரி மானேஜர், நேமம்கிருமம், திருமழிசை போஸ்டு, வயா பூந்தமல்லி செங்கல்பட்டு ஜில்லா இந்த விலாஸத்தாரிடம் கிடைக்கும்.

பத்திராதிபர்.